வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 24.03.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 77 பக்கங்கள் : 08

# வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த சகல நடவடிக்கைகளையும் எடுங்கள்!

## ஜனாதிபதி அநுரகுமார அறிவுறுத்தல்



கொழும்பு, மார்ச் 24

**நாட்டின் நாளாந்த வலுசக்தி நுகர்வு அதிகமுள்ள மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையிலான காலப்பகுதியில், வலுசக்தியை மிகச்சிறந்த முகாமைத்துவத்துடன் பயன்படுத்துவது குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தி, அவர்களின் பங்களிப்புடன் நாட்டின் வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.**

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக உலக நாடுகள் அனைத்தும் எதிர்நோக்கியுள்ள வலுசக்தி விநியோகத்திலான சவால்களுக்கு மத்தியில், வலுசக்தியைச் சரியான முகாமைத்துவத்துடன் பயன்படுத்தி நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை வெற்றி கொள்ள அதிகபட்ச பங்களிப்பை வழங்குவது, நிறுவன ரீதியாகவும் தனிநபர் ரீதியாகவும் தற்போது அனைவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பொறுப்பாகும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

வலுசக்தி பாதுகாப்பைப் பேணுவதற்காக தொடர்ச்சியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் பொருட்டு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக வலுசக்தி முகாமைத்துவம் 07

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் கொழும்புக்கு வருகை!



கொழும்பு, மார்ச் 24

மூன்று நாள் பயணமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் மசாட்டோ கன்டா நேற்று இலங்கைக்கு வருகை தந்தார்.

நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவரை கைத்தொழில் அமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ வரவேற்றார்.

நேற்று கொழும்பு துறைமுகத்திற்கு சென்று கட்டுப்பாட்டுக் கோபுரத்தை ஆய்வு செய்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர், பின்னர், தனியார் துறை 07

## எண்ணெய், அத்தியாவசியப் பொருள்கள் இலங்கைக்கு தேவைப்படின் வழங்க தயார்!

### ஈரான் அதிரடி அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 24

இலங்கையுடனான இருதரப்பு உறவில் ஈரானின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ள இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலிரெசா டெல்கோஷ், இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்குத் தேவைப்பட்டால், எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்க ஈரான் தயாராக உள்ளது எனவும் அவர் கூறினார்.

கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் 07

## இலங்கையின் அழைப்பின் பேரிலேயே ஈரானிய கப்பல் கொழும்புக்கு வந்தது!

கொழும்பு, மார்ச் 24

இலங்கைக்கு அருகிலுள்ள கடற்பரப்பில் அமெரிக்கத் தாக்குதலால் அழிக்கப்பட்ட ஈரானியக் கப்பல் "டேனா" இலங்கையின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந்ததாக இலங்கைக்கான ஈரானியத் தூதுவர் அலிரெசா டெல்கோஷ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஈரானியத் தூதுவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனை கூறினார்.

அந்தக் கப்பல் எந்தவொரு இராணுவ நோக்கத்திற்காகவும் நாட்டிற்குள் வரவில்லை 07

## பாணின் விலை 10 ரூபா உயர்வு

கொழும்பு, மார்ச் 24

எரிபொருள் விலை உயர்வைத் தொடர்ந்து 450 கிராம் பாணின் விலை 10 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் 450 கிராம் பாணின் புதிய விலை 130 ரூபாய் ஆகும். அத்துடன் ஏனைய 07

## பால்மா, கோதுமைமா விலை அதிகரிக்காது!

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் பால்மா மற்றும் கோதுமை மாவின் விலைகளை எக்காரணம் கொண்டும் அதிகரிக்கப்போவதில்லை என பால்மா இறக்குமதியாளர்கள் மற்றும் கோதுமை மா நிறுவனங்கள் நேற்று வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவிடம் உறுதியளித்துள்ளன.

தற்போதைய போர்ச் சூழலால் விநியோக வலையமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் 07

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தராக பேராசிரியர் வேல்நம்பி நாளை பதவியேற்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக, தற்போதைய உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதியும், கணக்கியலில் சிரேஷ்ட பேராசிரியருமான தி. வேல்நம்பி நாளை பதவி ஏற்கவுள்ளார்.

பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள சிறீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறவுள்ள விசேட அபிஷேக, ஆராதனைகளைத் தொடர்ந்து, முற்ப கல் 9:30 மணிக்குத் துணைவேந்தர் 07

## ஒட்டகப்புலத்தில் 2 ஏக்கர் காணி இராணுவத்தினரால் விடுவிப்பு!



யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணத்தில் சுமார் 36 வருட காலமாக இராணுவ கட்டுப்பாட்டில் காணப்பட்ட 2 ஏக்கர் காணி நேற்றுத் திங்கட்கிழமை இராணுவத்தினரால் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், வசாவிளான் கிழக்கு (ஜே/244) பகுதியிலுள்ள ஒட்டகப்புலம் தேவாலயத்துக்கு அருகில் இராணுவ பயன்பாட்டுக்காக 07

## ஈரான் மீதான தாக்குதல் 5 நாள்களுக்கு நிறுத்தம்!

### டொனால்ட் ட்ரம்ப் உத்தரவு

நியூயோர்க், மார்ச் 24

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே ஆக்கபூர்வமான பேச்சு கள் நடைபெறுவ தால் ஈரான் மீதான தாக்குதலை 5 நாள் களுக்கு நிறுத்தி வைப்பதாக டொனால்ட் ட்ரம்ப் தெரி வித்துள்ளார்.



அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி ஈரான் மீது ராணுவ நடவடிக்கையை தொடங் கின. 07

## துருக்கி வாகன விபத்தில் சிக்கி ஈழத்தமிழர்கள் மூவர் உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 24

துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இடம்பெற்ற கோரமான வாகன விபத்தில் சிக்கி, சுவிற்சர்லாந்தில் வசித்து வந்த ஈழத்தமிழர்கள் மூவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் இருவர் யாழ்ப்பாணம், நவாலியைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்றையவர் ஏழாலையைச் சேர்ந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுவிற்சர்லாந்தின் ஆர்கவ் மாநிலத்தில் வசித்து வந்த 60 வயதுடைய ஜெயநந்தினி கணேசலிங்கம், அவரது 28 வயதுடைய மகன் விபூசன் கணேசலிங்கம் 07

## பஸ் கட்டணங்கள் உயர்வு!

கொழும்பு, மார்ச் 24

நாட்டில் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளது.

பஸ் கட்டணங்களை 12.19 வீதம் உயர்த்த அமைச்சரவை அனுமதி 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# மசகு எண்ணெய் கப்பல் 2 நாள்களில் வராவிட்டால் மின் உற்பத்தி சிக்கலில்!

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 24

இன்று அல்லது நாளை மசகு எண்ணெய் தாங்கி கப்பல் நாட்டை வந்தடையாவிட்டால், மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதில் பாரிய சிக்கல் ஏற்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.ராஜகருணா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், குறித்த தினங்களில் கப்பல் வராவிட்டால் சுத்திகரிப்பு நிலைய நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடையும் எனவும், இதனால் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நெப்தா மற்றும் எரிபொருள் எண்ணெய் இருப்புகள் தீர்ந்துவிடும் அபாயம் உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய மின் உற்பத்திக்கு மாற்றீடாக டீசலைப் பயன்படுத்தவேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவித்த அவர், மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, மின் கட்டண உயர்வு தொடர்பான இறுதி முடிவு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி அறிவிக்கப்படும் என ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் மற்றும் ஜனவரி மாத காலப்பகுதியில் நிலவிய சந்தை நிலவரங்களைக் கருத்திற்கொண்டு, மின்சார சபை 13 வீத கட்டண உயர்வைப் பரிந்துரைத்துள்ள போதிலும், தற்போதைய உலகச் சந்தை நிலவரப்படி கட்டணங்களை அதிகரிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# எரிபொருள் விற்பனை அரசுக்கு பெரும் நட்டம்

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் தற்போது விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு லீற்றர் டீசல் மற்றும் பெற்றோல் மூலமும் அரசாங்கம் பாரிய நிதி இழப்பைச் சந்தித்து வருவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ. ராஜகருண விடுத்துள்ள விசேட அறிக்கையில், எரிபொருள்களின் உண்மையான சந்தை விலைக்கும் தற்போதைய விற்பனை விலைக்கும் இடையிலான பாரிய இடைவெளி குறித்து விளக்கமளித்துள்ளார்.

அதன்படி அரசாங்கம் ஒவ்வொரு லீற்றர் டீசலுக்கும் சுமார் 204 ரூபாவையும், பெற்றோலுக்கு 32 ரூபாவையும் மானியமாக வழங்குவதால் இப்பாதிப்பு ஏற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தற்போதைய மின் தேவை மற்றும் உற்பத்தி நிலவரங்களைக் கருத்திற் கொண்டு, வரும் காலங்களில் மின்சார உற்பத்திக்காக டீசலைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படலாம் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

எரிபொருள் நுகர்வைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் ஒதுக்கீடு முறைமை குறித்து பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெளிவுபடுத்தியுள்ளது.

அதிகரித்து வரும் நட்டத்தைக் குறைக்கும் வகையில், தேவையற்ற எரிபொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதே தற்போதைய அதிகரித்த ஒதுக்கீட்டின் நோக்கமாகும். (அ)

# எரிபொருள் விலை சூத்திரத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை!

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 24

அரசாங்கத்தின் எரிபொருள் விலைச் சூத்திரம் மற்றும் தற்போதைய விலைகள் கணக்கிடப்படும் முறைமையில் வெளிப்படைத்தன்மை இல்லை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் பின்வரும் முக்கிய அம்சங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிலையங்களில் விலையைத் தீர்மானிக்கும்போது, உலக சந்தையில் 92 ரக பெற்றோல் ஒரு பரல் 130 டொலர் எனவும், ஓட்டோ டீசல் ஒரு பேரல் 180 டொலர் எனவும் அரசாங்கம் உத்தேச விலைகளைக் கொண்டு கணக்கிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில்லறை விற்பனை விலையில் பெற்றோலுக்கு சுமார் 20 ரூபாயும், டீசலுக்கு 100 ரூபாயும் மானியமாக வழங்கப்படுவதாகக் காட்டப்படுவதை அவர் விமர்சித்துள்ளார்.

இலங்கை இவ்வளவு அதிக விலையைக் கொடுத்து எரிபொருளை வாங்காத நிலையில், இந்த "அனுமான விலைகள்" மற்றும் "கற்பனை மானியங்கள்" எதன் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தற்போதைய நிர்வாகம் முன்னர் மங்கள சமரவீரவினால் அறிமுகப்படுத்தப்பட்ட விலைச் சூத்திரத்தை எதிர்த்ததை நினைவூட்டிய அவர், தற்போதைய விலைக் கட்டமைப்பில் உள்ள உண்மையான செலவுகள் மற்றும் வரிகள் குறித்த விபரங்களை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (அ)

# அர்ஜுன ரணதுங்க உள்ளிட்டோருக்கு எதிராக குற்றப் பத்திரிகை!

கொழும்பு, மார்ச் 24

முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, அவரது சகோதரர் தம்மிக ரணதுங்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவராகப் பணியாற்றிய அவரது சகோதரர் தம்மிக ரணதுங்க ஆகியோர், உள்ளூர் கேள்வி கோரல்களை தன்னிச்சையான முறையில் கையாண்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான விரிவான விசாரணைகளை முன்னெடுத்த சட்டமா அதிபர் திணைக்களம், போதிய சான்றுகளின் அடிப்படையில் இருவருக்கும் எதிராக மேல் நீதிமன்றத்தில் உத்தியோகபூர்வமாகக் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்துள்ளது. (அ)

# பஸ் தரிப்பிடங்களில் காத்திருந்த மக்கள்!

கொழும்பு, மார்ச் 24

பஸ் கட்டணங்கள் திருத்தப்படும் வரை பல தனியார் பஸ் சங்கங்கள் சேவையை நிறுத்திக் கொள்ள முடிவு செய்ததைத் தொடர்ந்து, நேற்று காலை பஸ் தரிப்பிடங்களில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

இதனால் பயணிகள் பெரும் சிரமங்களைச் சந்தித்தனர்.

சமீபத்திய எரிபொருள் விலை திருத்தத்திற்கு இணையாக டீசல் விலையும் அதிகரித்துள்ளது.

இதனால் பஸ் கட்டணங்களைத் திருத்தவேண்டியது அவசியம் என பஸ் சங்கங்கள் போக்குவரத்து அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளன. (அ)

வெறுப்பு பேச்சுக்களை பேசும்

# தமிழ் எம்.பிக்களுக்கு எதிராக யாழில் நேற்றுப் போராட்டம்!




யாழ்ப்பாணம், மார்ச் 24

வெறுப்பு பேச்சுக்களை பேசும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு எதிராக, யாழ்ப்பாணத்தில் நேற்று போராட்டமொன்று இடம் பெற்றது. யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்திற்கு முன்பாக நேற்று காலை ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள், இனவாதம் மற்றும் பிரதேச, சாதிய வாதங்களை பேசும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள், நாட்டின் சமூக ஒற்றுமை, ஜனநாயக பண்புகள் மற்றும் மக்கள் பாதுகாப்பை நிலைநிறுத்த வேண்டிய பொறுப்பிலுள்ள அரசியல் பிரதிநிதிகள், சமீபத்தில் பொதுத் தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் வெளியிட்ட கருத்துக்கள் குறித்து ஆழ்ந்த கவலையையும் கடுமையான கண்டனத்தையும் தெரிவித்தனர். (அ)

# எரிசக்தி நெருக்கடிக்கு முற்றுப்புள்ளி:

# திருமலை எண்ணெய் குதங்கள் இந்தியாவுக்கு கொள்கையை கைவிடும் தேசிய மக்கள் சக்தி?

கொழும்பு, மார்ச் 24

இலங்கையின் தற்போதைய எரிசக்தி நெருக்கடிக்கு நீண்டகால மற்றும் நிலையான தீர்வாக, திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒத்துழைப்புடன் துரிதமாகப் புனரமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது குறித்து "த இந்து" நாளிதழுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், இரண்டாம் உலகப் போர் காலத்து எண்ணெய் சேமிப்பு வசதிகளை மீளமைப்பதன் மூலம் எரிபொருள் விநியோக சவால்களுக்கு ஒரு நிரந்தர தீர்வை எட்ட முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

திருகோணமலையை ஒரு பிராந்திய எரிசக்தி மையமாக மாற்றுவதற்காக, கடந்த 2025 ஏப்ரலில் இலங்கை, இந்தியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முன்னர் இத்திட்டத்தில் இந்தியத் தலையீட்டைத் தேசிய மக்கள் சக்தி எதிர்த்து வந்தபோதிலும், தற்போதைய உலகளாவிய போர்ச் சூழல் மற்றும் எரிபொருள் விநியோகப் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு இந்த விவகாரத்தில் கொள்கை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது எரிசக்தி அமைச்சினால் தொழில்நுட்ப அம்சங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருவதுடன், விரைவில் இது கேள்விப்பத்திர நிலையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# நீர்வேலியில் சுக்கிரவார சிறப்புச்சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 24

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் 49ஆவது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05. 30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் நிகழ்த்துவார். சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர், கலாநிதி ஏ. அனுசாந்தன் "விந்தம்பிலம் புகு படலம்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். சொற்பொழிவிலிருந்து நீர்வைக் கந்தன் புராண இதி காசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
24.03.2026 செவ்வாய்க்கிழமை

விசுவாவசு வருடம்,பங்குனி 10

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# சபைக்கு அடிக்கடி வந்து உரையாற்றும் ஜனாதிபதி

அநுர குமார திஸாநாயக்க இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக பதவியில் இருந்து வந்திருக்கும் இதுவரையான பதினெட்டு மாதங்களில் அடிக்கடி பாராளுமன்றத்தில் உரையாற்றி வந்திருக்கிறார்.

முன்னைய எந்தவொரு ஜனாதிபதியும் இவரைப் போன்று அடிக்கடி பாராளுமன்றத்திற்கு வந்து உரையாற்றியதில்லை.

திஸாநாயக்கவுக்கு அடுத்தாக கூடுதலான தடவைகள் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி என்றால் ரணில் விக்கிரமசிங்கவைக் கூற முடியும்.

2022 பொருளாதார வீழ்ச்சிக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றவர் என்பதால் வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு முன்னெடுக்கப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து சபையில் விளக்கமளிக்கவேண்டிய தேவை அவருக்கு இருந்தது என்று கூறலாம்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடனான அதே பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களையே ஜனாதிபதி திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் முன்னெடுப்பதால் அவருக்கும் பாராளுமன்றத்தில் அடிக்கடி விளக்கம் அளிக்கவேண்டிய தேவை இருக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம்.

அத்துடன் அண்மைய தசாப்தங்களாக ஜனாதிபதிகளே நிதியமைச்சர் பொறுப்பையும் தங்களுடன் வைத்திருக்கும் ஒரு பாரம்பரியமும் வளர்க்கப்பட்டு வருகிறது. அதனாலும் அவர்கள் பாராளுமன்றத்துக்கு அடிக்கடி வரவேண்டியிருக்கிறது எனலாம்.

1978 ஆம் ஆண்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்து கொள்கை விளக்கவுரைகளை நிகழ்த்துவதற்கே ஜனாதிபதிகள் பாராளுமன்றத்துக்கு வருவது நடைமுறையாக இருந்துவந்தது.

ஆனால், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலத்தில் 2010 செப்ரெம்பரில் அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட பதினெட்டாவது திருத்தமே மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு வந்து உரையாற்றுவதற்கு வகை செய்தது.

அவ்வாறு பாராளுமன்றத்துக்கு வருகின்றபோது ஜனாதிபதிகளுக்கு சபையில் வாக்களிப்பதைத் தவிர, பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சகல சிறப்புரிமைகளும் உண்டு.

மைத்திரி - ரணில் அரசாங்க காலத்தில் 2015 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது அரசியலைமைப்புத் திருத்தம் ஜனாதிபதியின் அதிகாரங்களில் குறைப்பைச் செய்த போதிலும், மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்துக்கு வந்து ஜனாதிபதிகள் உரையாற்றுவதற்கான ஏற்பாட்டில் மாற்றம் செய்யப்படவில்லை.

தனது ஆட்சிக் காலத்தில் இந்த ஏற்பாட்டைக் கொண்டுவந்த மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் தோல்வி கண்டபிறகு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராகவும் வந்தார். மைத்திரிபால சிறிசேனவும் அவரைப் பின்பற்றினார்.

வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இருந்திருந்தால் சிலவேளை விக்கிரமசிங்கவும் 2024 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு சபைக்கு வந்திருக்கவும் கூடும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி அடிக்கடி பாராளுமன்றத்துக்கு வந்து நாடு எதிர்நோக்கும் பிரச்னைகளையும் அவற்றைக் கையாளுவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் செயல்பாடுகளையும் விளக்கிக்கூறுவது ஆட்சிமுறையில் பொறுப்புக்கூறலை அதிகரிக்கும் என்று ஒரு அபிப்பிராயமும் இருக்கிறது.

ஆனால், ஜனாதிபதி திஸாநாயக்க அடிக்கடி சபைக்கு வந்து மணிக்கணக்காக உரையாற்றுவதைப் பார்த்தால், இன்றைய நெருக்கடி நிலையில் தனது நிருவாகத்தின் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் பிரதமரினாலோ அல்லது அரசாங்கத்தின் வேறு தலைவர்களினாலுமோ சிறப்பாக விளக்கி நியாயப்படுத்த முடியாது என்றும் அரசாங்கத்தின் பெயரைத் தன்னந்தனியனாக தன்னால் மாத்திரமே பாதுகாக்க முடியும் என்று அவர் நினைக்கிறாரோ என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுகிறது.

# பணிப்பகிஷ்கரிப்பு அல்ல நஷ்டத்தால் ஏற்பட்ட விலகல்

## தனியார் பஸ் சங்கம் விளக்கம்

கொழும்பு, மார்ச்.24

பஸ் சேவைகளிலிருந்து விலகியமை ஒரு வேலைநிறுத்தப் போராட்டம் அல்ல என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

எரிபொருள் விலை அதிகரித்துள்ள நிலையில், பழைய கட்டணத்தின் கீழ் பஸ்களை இயக்க முடியாது என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் புதிய பஸ் கட்டணத் திருத்தத்தை அமுல்படுத்தியிருக்க முடியும் என்றும், அவ்வாறு செய்யாததே இந்த நிலைக்குக் காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

90 சதவீதத்துக்கும் அதிகமான பஸ்கள் சேவையிலிருந்து விலகியுள்ளன. எவருக்கும் அழுத்தம் கொடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒரு சில பஸ்கள் சேவையில் ஈடுபட்டுள்ளன. எவ்வாறாயினும், "சிசு செரிய" பாடசாலை பஸ் சேவைகள் எந்தவித தடையுமின்றி முன்னெடுக்கப்பட்டன.

இதனை ஒரு வேலைநிறுத்தப் போராட்டமாக நாம் கூறவில்லை. நஷ்டத்தை ஈடுகட்ட முடியாததால் சேவையிலிருந்து விலகியுள்ளோம். குறுகிய- தூர சேவைகளுக்கு 5,000 முதல் 6,000 ரூபாய் வரையிலும், நீண்ட தூர சேவைகளுக்கு 15,000 முதல் 20,000 ரூபாய் வரையிலும் நஷ்டம் ஏற்படுகிறது. எவரும் சம்பளம் இல்லாமல் வேலை செய்ய மாட்டார்கள். இது ஒரு தொழில். கடந்த காலங்களில் எரிபொருள் விலை உயர்ந்தவுடன் அதிகாரிகள் எம்முடன் கலந்துரையாடினர். ஆனால், இம்முறை எந்தவித பேச்சுவார்த்தையும் இன்றி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் அமைச்சும் செயல்பட்டன. எம்முடன் கலந்தாலோசித்து முடிவுகளை எடுக்குமாறு அரசாங்கத்துக்கு ஒரு சிறிய சமிக்ஞையை வழங்கியுள்ளோம்.- என்றார்.

(எ)

# ஈரானிய அரச வானொலி நிலையத்தின் மீது தாக்குதல்

தெஹ்ரான், மார்ச். 24

ஈரானிய அரச வானொலி நிலையத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

ஈரானின் தெற்கு துறைமுக நகரில் அமைந்துள்ள குறித்த வானொலி நிலையத்தின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் மேலும் ஒருவர் காயமடைந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, ஈரான் மீது இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களில் சிறுவன் ஒருவர் உயிரிழந்தார் என்று அமெரிக்காவை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஈரான் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரையான காலப் பகுதியில் 1,400இற்கும் அதிகமானோர் உயிரிழந்ததோடு, அவர்களில் 214 சிறுவர்களும் அடங்குவர் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# மதுபானக்கொள்ளை: "மோதர சுதா" கைது!

கொழும்பு, மார்ச். 24

மட்டக்குளிய பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றினுள் புகுந்து, அங்கிருந்த வெளிநாட்டு மதுபான போத்தல்களைத் திருடிய நபர் ஒருவரை முகத்துவாரம் பொலிஸார் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் "மோதர சுதா" என அழைக்கப்படும் 21 வயது இளைஞன் ஆவார். மேல் மாகாண புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய, முகத்துவாரம் பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர் அவரது வீட்டில் வைத்து நேற்றுக்காலை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட போது அவரிடமிருந்து 10 கிராம் 800 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது, குறித்த பல்பொருள் அங்காடியின் பின்புறத் தகட்டை அகற்றி உள்ளே நுழைந்து மதுபான போத்தல்களைத் திருடியதாகவும், அவற்றில் சிலவற்றை விற்று ஹெரோயின் போதைப்பொருளை வாங்கியதாகவும் அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார்.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ச் - 23 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 10
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.00
திதி : சஷ்டி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன் மனைவி அன்யோன்யம் பிறக்கும். அரை குறையாக நின்ற வேலைகள் முடியும். தோற்றப் பொலிவுக் கூடும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தேவையற்ற விஷயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். யாரையும் எடுத்தெறிந்து பேச வேண்டாம்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**கடகம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வீட்டை புதுப்பிக்க திட்டமிடுவீர்கள். பயணங்களால் பய னடைவீர்கள். புது பொருள் வந்து சேரும்.

**சிம்மம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலைக்கு தகுந்தார் போல் பொறுப்பாக இருப்பார்கள். பிரியமானவர்க ளுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள்.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர் கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கள் கிடைக்கும். வீடுவாகனத்தை சீர் செய்வீர்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்ன சின்னகவலைகள் வந்து போகும். உறவினர் நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அவச ரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம்.

**விருச்சிகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடு வீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ் வீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர் கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். பயணங்கள் சிறப்பாக அமையும்.

**மகரம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர் கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறை வேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உறவினர்கள் மதிப்பார்கள்.

**கும்பம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவு வார்கள். புதுவேலை கிடைக்கும். பழைய கட னைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். நன்மை கிடைக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிர பலங்களின் நட்பு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். துணிச்சலுடன் செயல்படும் நாள்.

# அரசின் அனுமதி கிடைத்தவுடன் பஸ் கட்டணங்கள் அறிவிக்கப்படும்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

கொழும்பு, மார்ச். 124

நேற்றைய தினம் ஒரு சில பகுதிகளில் பஸ்கள் இயக்கப் பட்ட போதிலும், பல பிரதே சங்களில் பஸ் சேவைகள் இடம் பெறவில்லை என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிருண்டா தெரிவித்தார்.

அதிவேக வீதிகளில் பஸ் சேவைகள் முழுமையாக ஸ்தம் பிதமடைந்துள்ளதால், பயணி கள் சாதாரண வீதிகள் ஊடாகப் பயணிக்க முற்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு (இ.போ.ச) சொந்த மான அனைத்து பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட் டுள்ள போதிலும், தனியார் பஸ்களின் எண்ணிக்கையில் பாரிய குறைபாடு நிலவுகிறது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் தயாரிக்கப் பட்ட பஸ் கட்டணத் திருத்த யோசனை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அமைச்சரவை அனுமதி கிடைத்தவுடன் புதிய பஸ் கட்டண விவரங்கள் உத்தியோ கபூர்வமாக அறிவிக்கப்படும்.

பஸ் கட்டணங்களை 10 சத வீதத்துக்கும் அதிகமான மட் டத்தில் அதிகரிப்பதற்கான அனுமதியை ஆணைக்குழு கோரியுள்ளது.

இதற்கமைய, ஆரம்ப கட்ட ணம் முதல் அதிகபட்ச கட்ட ணம் வரை சுமார் 350 கட்டண நிலைகளை உள்ளடக்கிய புதிய கட்டணப் பட்டியல் தயாரிக் கப்பட்டுள்ளது என்று நிலான் மிருண்டா மேலும் சுட்டிக்காட் டினார். (எ)


# 400 லீற்றர் டீசல் கொண்டு சென்றவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், மார்ச். 24

மருதனார்மடம் பகுதியில் வைத்து 400 லீற்றர் டீசலுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலை யத்தில் இருந்து குறித்த எரிபொ ருளை கொள்வனவு செய்து, உழவியந்திரத்தில் கொண்டு வருவதாக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். நிதர்சனுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது

கைது செய்யப்பட்ட நபர் நுவரெலியாவை சேர்ந்தவர்



என்றும், அவர் யாழ்ப்பாணத் தில் தங்கியிருந்து வேலை செய்து வருவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேகநபரை நீதிமன் றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வவுனியாவில் பல்வேறு உதவி

வவுனியா, மார்ச். 24

தொண்டமனாறு சந்நிதி யான் ஆச்சிரமத்தால் வவுனியா தெற்கு இலுப்பைக்குளம் கிரா மத்தில் பொருளாதாரத்தால் நலிவுற்ற பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்றுக்கு வாழ்வா தார உதவியாக இரண்டு இலட் சத்து 30,000 ரூபா பெறுமதி யான கோழி பண்ணை ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள் ளதுடன் சிதம்பரபுரம் சிறி தான் தோன்றி நாகம்பாள் அறநெறிப் பாடசாலையில் உள்ள 60 மாணவர்களுக்கு ஒரு இலட் சத்து 45,000 ரூபாய் பெறுமதி யான சீருடைகளும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. அத்துடன் வவுனியா கல்மடு சிறி விநாயகர் ஆலய சரஸ்வதி



அறநெறிப் பாடசாலையில் 47 மாணவர்களுக்கும் 75,000 ரூபாய் பெறுமதியான சீருடைத் துணிகள் வழங்கப்பட்டன.

இந்த உதவிகளை சந்நிதி யான் அச்சிரம முதல்வர் செ. மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாக சென்று வழங்கினார். (எ-08)

# வீமன்காமம் இராஜராஜேஸ்வரி ஆலய உற்சவகால சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச். 24

வீமன்காமம் வடக்கு குருந் தடி சிறீ இராஜராஜேஸ்வரி அம் பாள் திருக்கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன் னிட்டு பெரிய புராணச் சிறப் புச்சொற்பொழிவு ஆலயப் பிர தான மண்டபத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கி ழமை தொடக்கம் அடுத்த மாதம் 07 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை வரை தினமும் இரவு 07. 00 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத் தின் ஒழுங்கமைப்பில் நடை பெறவுள்ளது. அந்தவகையில் சைவப்புலவர்கள் சி. கா. கமல நாதன், க.கைலநாதன், ச. முகுந் தன், பொன். சந்திரவேல், இளஞ்சைவப்புலவர்கள் ச.நவநீதன், நித்திய பாபுதரன், த. மனோஜ்குமார் ஆகியோர்க ளின் சொற்பொழிவும், சொற் பொழிவில் இருந்து மாணவர் களிடம் வினாக்கள் தொடுக்கப் பட்டு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பஸ் கட்டணம் உயர்வு- தாமதம்

# பணிப்பகிஷ்கரிப்பால் பயணிகள் கடும் பாதிப்பு

கொழும்பு, மார்ச். 24

பஸ் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படும் வரை சேவையிலிருந்து விலகிக் கொள்ள சில தனியார் பஸ் சங்கங்கள் தீர்மானித்துள்ளதால், நேற்றுக் காலை பிரதான பேருந்து நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்பட்டன. இதனால், பயணிகள் கடும் சிரமத்துக்கு உள்ளாகினர்.

கடந்த 21ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலையைத் திருத்தியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. இதன்படி, டீசல் விலை அதிகரித்துள்ளதால், பஸ் கட்டணத் திருத்தம் அவசியம் என்று பஸ் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

நேற்று முன்தினமே பஸ் கட்டணத் திருத்தத்தை வழங்குமாறு கோரியிருந்த போதிலும், அது நிறைவேற்றப்படாத காரணத்தினால் நேற்றைய தினம் சேவையிலிருந்து விலகத் தீர்மானித்ததாக அச்சங்கங்கள் குறிப்பிட்டன.

எவ்வாறாயினும், எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக பஸ் கட்டண சூத்திரத்தின்படி தற்போதைய கட்டணத்தில் 10 சதவீதத்துக்கும் அதிகமான தாக்கம் ஏற்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

புதிய பஸ் கட்டணங்கள் அறிவிக்கப்படும் வரை சேவையில் ஈடுபடப் போவதில்லை என்று பஸ் சங்கங்கள் மீண்டும் அறிவித்துள்ளன. எரிபொருள் விலை உயர்வால் அதற்கான செலவீனம் அதிகரித்துள்ளதோடு, பழைய கட்டணத்தின் கீழ் பேருந்து பராமரிப்பு உள்ளிட்ட செலவுகளை ஈடுகட்ட முடியாது எனவும் சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். (எ)

### கொழும்பு நகரில்

## வாகன தரிப்பிடக் கட்டணம் நேற்று முதல் மீண்டும் அறவீடு

கொழும்பு, மார்ச். 24

கொழும்பு நகரில் வாகனத் தரிப்பிடக் கட்டணங்களை நேற்று முதல் மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்றுக் காலை 06.00 மணி முதல் வழமை போன்று வாகனத் தரிப்பிட முகாமைத்துவம் மற்றும் கட்டண அறவீட்டு நடைமுறைகளை முன்னெடுப்பதற்கு, கொழும்பு மாநகர சபையின் நிதிக் குழு தீர்மானித்துள்ளது என்று மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

எரிபொருள் நிலையங்களுக்கு அருகில் நிலவிய வாகன வரிசைகள் மற்றும் எரிபொருள் பெற வந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், கடந்த 18ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை வாகனத் தரிப்பிடக் கட்டண அறவீடு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், எரிபொருள் விநியோகத்துக்காக அறிமுகப் படுத்தப்பட்ட கியூ. ஆர். முறைமை மற்றும் ஒற்றை-இரட்டை இலக்க முறைமை ஊடாக எரிபொருள் வரிசைகள் குறைந்துள்ளதை கருத்தில் கொண்டு, மீண்டும் கட்டணங்களை அறவிடுவது குறித்து கொழும்பு மாநகர சபை அவதானம் செலுத்தியுள்ளது. (எ)

## சட்டவிரோத பொருட்களுடன் கட்டுநாயக்கவில் ஐவர் கைது

கொழும்பு, மார்ச். 24

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரெட்கள், மருந்துகள் மற்றும் வாசனைத் திரவியங்களுடன் 5 பயணிகள் நேற்று அதிகாலை விமான நிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 70, 460 வெளிநாட்டு சிகரெட்கள், பல்வேறு வகையான மருந்துப் பொருட்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் என்பன சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

இவற்றின் மொத்த பெறுமதி சுமார் ஒரு கோடியே 16 இலட்சத்து 72 ஆயிரத்து 600 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் மொறட்டுவை மற்றும் மகரகம பிரதேசங்களை சேர்ந்த மூன்று இலங்கை வர்த்தகர்களும், சீன நாட்டைச் சேர்ந்த ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணும் உள்ளடங்குகின்றனர்.

இவர்கள் அனைவரும் நேற்று அதிகாலை ஹொங்கொங்கிலிருந்து "கதே பசிபிக்" விமான சேவைக்குச் சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். (எ)

## வீரவில பகுதியில் வைக்கோல் தீயில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு

அம்பாந்தோட்டை, மார்ச். 24

வீரவில, கங்கசிறிகம பகுதியில் நபர் ஒருவர் நேற்றுக் காலை தீயில் சிக்கி உயிரிழந்தார். வீரவில பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு உயிரிழந்தவர் திஸ்ஸமஹாராம, கங்கசிறிகம பகுதியைச் சேர்ந்த 63 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

குறித்த நபர் தனது வயலில் இருந்த வைக்கோலுக்குத் தீ வைத்த நிலையில், அந்தத் தீ அருகில் உள்ள ஏனைய வயல் பகுதிகளுக்குப் பரவுவதைத் தடுக்க முயன்றார்.

அவர் தீயில் சிக்கிப் பலத்த தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்தமை முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

## சமூக ஊடகங்களில் பரவும் செய்தி குறித்து விளக்கம்

கொழும்பு, மார்ச். 24

பொலிஸாரால் வெளியிடப்பட்டதைப் போன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வரும் ஒரு பதிவு தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெளிவுபடுத்தியுள்ளது.

"நாட்டின் இந்த பொருளாதார நெருக்கடி காலத்தில் நாம் அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய சில முக்கிய விடயங்கள் குறித்து உங்கள் அவதானத்தைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்" என்று பொதுமக்களுக்கு வழிகாட்டுவது போல் அமைந்துள்ள அந்தச் செய்தி, எவ்வகையிலும் பொலிஸாரால் வெளியிடப்பட்டது அல்ல என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் தரப்பிலிருந்து பொதுமக்களுக்கு ஏதேனும் அறிவித்தல் விடுக்கப்படுவதாயின், அது பொலிஸ் ஊடகப் பிரிவின் உத்தியோகபூர்வ கடிதத் தலைப்பின் கீழ் ஊடகங்களுக்கு அறிக்கையாகவே வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் இலச்சினை அல்லது பெயரைப் பயன்படுத்தி இவ்வாறான பொய்த் தகவல்களை பரப்புவது ஏதேனும் திட்டமிட்ட செயலா? என்பது குறித்து கண்டறிய ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ)

## விபத்தில் சிக்கிய சிறுவன் மரணம்!

பதுளை, மார்ச். 24

பதுளை - பண்டாரவளை வீதியில், தோவ ரஜமஹா விகாரைக்கு அருகில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் 10 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்தார்.

பதுளையிலிருந்து பண்டாரவளை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று, எதிர்த்திசையில் வந்த ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது.

இந்த விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிள் சாரதி, ஓட்டோ சாரதி மற்றும் அதில் பயணித்த நால்வர் காயமடைந்து தியத்தலாவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதன்போது, மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட 10 வயது சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவர் பண்டாரவளை பகுதியைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# எரிபொருள் விலை அதிகரிப்பு ஒரு கறுப்புச்சந்தை சூதாட்டம்

## அரசாங்கம் மீது விமல் வீரவன்ஸ விமர்சனம்

கொழும்பு, மார்ச். 24

தற்போதைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள அசாதாரண எரிபொருள் விலை அதிகரிப்பு, மக்களைத் துன்புறுத்தும் ஒரு "கறுப்புச் சந்தை சூதாட்டம்" என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசாங்கம் பழைய எரிபொருள் கையிருப்புகளை வைத்துக் கொண்டு, புதிய விலையில் அவற்றை விற்பனை செய்து அதிக இலாபம் ஈட்டுகிறது.

குறைந்த விலையில் கொண்டு வரப்பட்ட எரிபொருள் விநியோகிக்கப்படுவதைத் தடுப்பதற்காகவே சனிக்கிழமையன்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மூடப்பட்டது. அந்தப் பழைய கையிருப்புகளை வைத்துக்கொண்டு, ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் "புனர்வாழ்வு விலை" என்ற பெயரில் விலையை அதிகரித்துள்ளனர். இது ஒரு மாட்டை இரண்டு முறை உரிப்பதற்குச் சமமான செயலாகும். அநுர குமார தற்போது ஒரு கொடூரமான கறுப்புச் சந்தை முதலாளியின் நிலைக்கு வந்துள்ளார்." என்றார்.

(எ)


# காத்தான்குடி வாவிக்கரை பூங்கா, சுற்றுலா படகுச்சேவை ஆரம்பம்



மட்டக்களப்பு, மார்ச். 24

காத்தான்குடி நகரின் அழகையும் சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்தையும் புதிய உயரத்துக்கு கொண்டு செல்லும் நோக்கில், பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எம். ஹிஸ்புல்லாஹ்வின் வழிகாட்டலின் பேரில் உருவாக்கப்பட்ட "வாவிக்கரை பூங்கா மற்றும் சுற்றுலா படகுச் சேவை" நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

காத்தான்குடி நகர சபைத் தவிசாளர் எச்.எம். அஸ்பர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக ஹிஸ்புல்லாஹ் எம்.பி. கலந்து கொண்டு திட்டத்தை திறந்து வைத்தார். (எ)



திருகோணமலை சிறீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.(அ)

# நுவரெலியாவில் இடியுடன் மழை

கொழும்பு, மார்ச். 24

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகினறார்கள்.(எ)

# சவுதி அரம்கோ ஆசியாவுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் இரண்டாவது முறை குறைப்பு

கொழும்பு, மார்ச். 24

உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஏற்றுமதி நிறுவனமான சவுதி அரம்கோ ஏப்ரல் மாதத்துக்காக ஆசிய வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் கச்சா எண்ணெய் விநியோகத்தை இரண்டாவது முறையாக குறைத்துள்ளது.

அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர்ச் சூழல் காரணமாக, ஹோர்முஸ் நீரிணை ஊடாக மேற்கொள்ளப்படும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளே இதற்கு முக்கிய காரணமாகும்.

வெளிநாட்டு ஊடகங்களின்படி, ஏப்ரல் மாதத்தில் செங்கடலில் அமைந்துள்ள யான்பு துறைமுகம் வழியாக ஏற்றுமதி செய்யப்படும் 'யுசயடி டுபைாவ' வகை கச்சா எண்ணெயை மட்டுமே தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்க அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன் விளைவாக, ஆசிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான விநியோகம் கடுமையாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன், சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் உற்பத்தியும் வரையறுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# ஓட்டோவில் திடீர் தீ விபத்து

திருகோணமலை, மார்ச். 24

மூதூர் - அறபாநகர் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை ஓட்டோ ஒன்றில்திடீர்தீவிபத்து ஏற்பட்டது.

சம்பூரிலிருந்து மூதூர் நோக்கி சென்று கொண்டிருந்தபோது, குறித்த ஓட்டோவில் திடீரென தீப்பற்றியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதையடுத்து அப்பகுதி மக்கள் உடனடியாக ஒன்று திரண்டு தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு, குறுகிய நேரத்திலேயே அதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீப்பற்றியதற்கான காரணம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. (எ)

# குளத்தில் மூழ்கி ஒருவர் பலி!

அநுராதபுரம், மார்ச். 24

அநுராதபுரம் - நொச்சியாகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுபெத்வெவ குளத்தில் குளிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

உயிரிழந்தவர் நொச்சியாகம, கட்டுபத்பெத்த பகுதியைச் சேர்ந்த 58 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

(எ)

# பொலிஸ் சுற்றிவளைப்பு: 374 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, மார்ச். 24

நாடளாவிய ரீதியில் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 374 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 25,414 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட் டனர். 20 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடி யாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 226 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 68 பேரும் கைது செய்யப்பட் டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 191 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 43 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

# அதிகரிக்கும் வெப்பநிலை: சிறுவர்கள் அதிகளவில் நீரை பருகுவது அவசியம்

## விசேட மருத்துவ நிபுணர் அறிவுரை

கொழும்பு, மார்ச். 24

நாட்டில் தற்போது நிலவிவரும் கடும் வெப்பமான காலநிலையால் சிறுவர்கள் நீர்ச்சத்து குறைபாடு மற்றும் வெப்ப பக்கவாதத்துக்குள்ளாகும் அபாயம் அதிகரித்துள்ளது என்று கொழும்பு லேடி ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வெப்பமான காலநிலையில் சிறுவர்களின் உடலில் நீர்ச்சத்து விரைவாகக் குறையக்கூடும். எனவே, அவர்களுக்கு அதிகளவு நீர் மற்றும் இயற்கையான பானங்களை (இளநீர், பழச்சாறு) [illegible]

சிறுவர்களிடம் உடற்சோர்வு, பசியின்மை அல்லது உடல் வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக அவர்களுக்கு அதிகளவு நீர் மற்றும் திரவ உணவுகளை வழங்க வேண்டும்.

தற்போது பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தடகளப் போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில், போதியளவு நீர் அருந்தாமல் விளையாட்டுக்களில் ஈடுபடும் சிறுவர்கள் வெப்ப வாதத்துக்குள்ளாகக்கூடும்.

வெப்பத்தாக்கத்தினால் இதயம் மற்றும் மூளை போன்ற முக்கிய உறுப்புகள் பாதிக்கப்படலாம். இது வலிப்பு, மயக்கம் மற்றும் தீவிர சந்தர்ப்பங்களில் மரணத்தை கூட ஏற்படுத்தக் கூடும் என்ற மருத்துவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடும் வெப்பத்தினால் சிறுவர்களுக்கு வியர்க்குரு, தோல் அரிப்பு மற்றும் தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம்.

சிறுவர்களை ஒரு நாளைக்கு குறைந்தது இரண்டு தடவைகள் குளிப்பாட்ட வேண்டும். அவர்கள் சுமார் 20 நிமிடங்கள் வரை நீரில் விளையாட அல்லது இருக்க அனுமதிப்பது உடல் வெப்பத்தைத் தணிக்கவும் தோல் நோய்களைத் தவிர்க்கவும் உதவும்- என்றார்.

(எ)

# கிளினிக் நோயாளர்களுக்கு ஒரே தடவையில் மருந்துகள்

கொழும்பு, மார்ச். 24

மருத்துவமனை கிளினிக்குகளின் மூலம் நோயாளர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் மருந்துகளை, இனிவரும் காலங்களில் இரண்டு மாதங்களுக்கு போதுமானதாக ஒரே தடவையில் வழங்குமாறு சுகாதாரத் துறை அதிகாரிகள் அனைத்து மருத்துவமனை நிர்வாகிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சுகாதார பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி, எரிசக்தி முகாமைத்துவத்தை கருத்தில்கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், நோயாளர்களுக்கு ஏதேனும் அவசர தேவை ஏற்பட்டால், வழக்கம் போல் கிளினிக்குகளுக்குச் சமுகமளிக்க முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். எரிசக்தி நெருக்கடி காரணமாக பல்வேறு சவால்கள் எழுந்துள்ள போதிலும், மருத்துவமனைகளின் அறுவைச் சிகிச்சை நடவடிக்கைகள் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் விஜேமுனி மேலும் தெரிவித்தார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய அபிவிருத்தி வங்கி....

பிரதிநிதிகளுடன் ஒரு சிறப்பு மதிய விருந்தில் கலந்து கொண்டார்.

பிற்பகலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடத் தூதரகத்தில் நடைபெற்ற வரவேற்பு மற்றும் பணியாளர் கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டார்.

இன்று, கன்டாவும் அவரது குழுவினரும், டித்வா புயலால் ஏற்பட்ட சேதங்களை ஆய்வு செய்வதற்காக கேகாலை மாவட்டத்திற்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்டவர்களையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். (அ)

## எண்ணெய், அத்தியாவசியப்...

இந்தக் கருத்தினை வெளியிட்ட அவர், இலங்கையை ஒரு நட்பு நாடு என்று விவரித்ததோடு, ஈரான் தனது பங்காளிகளுடன் திறந்த மற்றும் ஆதரவான நிலைப்பாட்டைப் பேணி வருகிறது என்றும் தெரிவித்தார்.

அதற்கு அமைவாக இலங்கை உள்ளிட்ட நட்பு நாடுகளின் கப்பல்களுக்கு ஹோர்முஸ் நீரிணை தொடர்ந்தும் அணுகக்கூடியதாக உள்ளது. அத்தகைய நாடுகளின் தேவைகளை எளிதாக்க ஈரான் தயாராக உள்ளது என்றும் இதன்போது உறுதிப்படுத்தினார்.

அத்துடன், இலங்கைக்குத் தேவைப்பட்டால், எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை வழங்க ஈரான் தயாராக உள்ளது, இரு நாடுகளுக்கும் இடையே வலுவான மற்றும் ஒத்துழைப்புடன் கூடிய உறவுகளைப் பேணுவதன் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

இலங்கை இக்கட்டான நிலைக்கு உள்ளாவதை ஈரான் ஒருபோதும் விரும்பாது என்றும், ஈரான் தேசத்திற்கு இலங்கை மிகவும் மரியாதைக்குரிய நாடு என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், நாட்டில் வசிக்கும் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு ஆதரவளிக்கவும் அவர்களைப் பாதுகாக்கவும் ஈரான் விரிவான உள்கட்டமைப்பை நிறுவியுள்ளது. இன்றுவரை, அவர்களைப் பாதிக்கும் எந்தப் பிரச்னைகள் குறித்தும் அறிக்கைகள் பதிவு செய்யப்படவில்லை, அவர்களின் நல்வாழ்வை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது.

ஈரானில் உள்ள இலங்கையர்கள் மீண்டும் தாயகம் திரும்ப விரும்பினால், அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க ஈரான் அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் தூதுவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அண்மையில் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நடத்திய டோர்பிட்டோ தாக்குதலால் மூழ்கடிக்கப்பட்ட ஈரானின் "ஐரிஸ் டேனா" போர்க்கப்பலில் இருந்தவர்களை மீட்பதற்கு, ஈரான் கோரிக்கை விடுப்பதற்கு முன்னரே இலங்கை நடவடிக்கை எடுத்திருந்தது. இலங்கையின் அந்த உதவியை இச்சந்தர்ப்பத்தில் தூதுவர் அலிரேசா டெல்கோஷ் நன்றியுடன் நினைவு கூர்ந்தார். (அ)

## இலங்கையின் அழைப்பின்...

என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அதன்படி, இலங்கையின் உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் வந்த கப்பலை, அமெரிக்கா எந்தவித முன்னறிவிப்பும் இன்றித் தாக்கியுள்ளது. இந்தத் தாக்குதலில் 104 பேர் உயிரிழந்துள்ளனர், அவர்களில் பெரும்பாலானோர் இராணுவ சார்பற்ற ஓர் இசைக் குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

அண்டை நாடுகளில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீதான ஈரானின் தாக்குதல்கள், அந்த அண்டை நாடுகளின் இறையாண்மையை மீறுபவை அல்ல என்பதை வலியுறுத்தவேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும், அவை அமெரிக்கத் தாக்குதல்களுக்கு நேரடிப் பதிலடியாக மேற்கொள்ளப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகள் மட்டுமே என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## பாணின் விலை...

வெதுப்பகப் பொருள்களின் விலைகளும் ரூ.10 உயர்த்தப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

## துருக்கி வாகன விபத்தில்...

மற்றும் 47 வயதுடைய சிவாஸ்கரன் சுகந்தி ஆகியோரே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்தவர்களாவர்.

ஜெயநந்தினியின் 60ஆவது பிறந்த நாளை துருக்கியில் சிறப்பாகக் கொண்டாடி முடித்துவிட்டு, மீண்டும் சுவிற்சர்லாந்து திரும்புவதற்காக இஸ்தான்புல் விமான நிலையத்தை நோக்கி அவர்கள் பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தாயக உறவுகள் மற்றும் புலம்பெயர் தமிழரிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ள இந்த விபத்து குறித்த மேலதிக விசாரணைகளைத் துருக்கி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டால் தொழிற்சங்க போராட்டத்தில் குதிப்போம்!

### சுகாதாரப் பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 24

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தமது கடமைகளை முன்னெடுக்க முடியாத பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின், தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சங்கத்தின் செயலாளர் சமில் முத்துகுட, தற்போது மோட்டார் சைக்கிள்களுக்கு வாராந்தம் வழங்கப்படும் 8 லீற்றர் எரிபொருள் ஒதுக்கீடு தனிப்பட்ட தேவைகளுக்கே போதுமானதாக உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் களப்பணிகளுக்காக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளதால், உத்தியோகபூர்வ கடமைகளுக்கென விசேட எரிபொருள் ஒதுக்கீட்டை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அத்தியாவசிய சேவையாகக் கருதப்படும் சுகாதாரத் துறையினர், நீண்ட வரிசைகளில் காத்திருக்காமல் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான முறையான பொறிமுறை ஒன்று அவசியம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

## வலுசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த...

தொடர்பாக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேலும் நடைமுறைச் சாத்தியமான நிலைக்குக் கொண்டு வருவது குறித்தும், குறிப்பாக அரச சேவைக்கு வழங்கப்படவேண்டிய வழிகாட்டல்கள் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

அதேபோல், உள்ளூராட்சிமன்ற மட்டத்தில் வலுசக்தி நுகர்வை முறையான முகாமைத்துவத்துக்கு உட்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்து அந்தந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடுமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

விளம்பரங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மின்சாரப் பெயர்ப்பலகைகள் மற்றும் ஏனைய அலங்கார மின் கட்டமைப்புகளுக்கு அதிகளவிலான மின்சாரம் செலவிடப்படுவதாகவும், அதனைக் மட்டுப்படுத்துவதன் மூலம் நாட்டின் மின்சார நுகர்வில் குறிப்பிடத்தக்க அளவைச் சேமிக்கமுடியும் என்றும் இதன்போது குறிப்பிடப்பட்டது.

நகர்ப்புறங்களில் அவசியமற்ற வீதி விளக்குகளின் பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் வலுசக்தி முகாமைத்துவத்திற்காக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அது தொடர்பாகப் பின்பற்றக்கூடிய மாற்று வழிமுறைகள் குறித்து சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் இணைந்து கலந்துரையாடி, விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி மேலும் சுட்டிக்காட்டினார்.

வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்ன, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆலோக பண்டார, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அதிபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிரேஷ்ட பேராசிரியர் கபில சி.கே. பெரேரா, ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி பிரபாத் சந்திரகீர்த்தி, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் டி.பாஸ்கரன் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பலரும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ)

## யாழ்.பல்கலைக்கழகத்...

அலுவலகத்தில் அவர் உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார் என்று பதிவாளர் வி. காண்டீபன் அறிவித்துள்ளார். (ஓ)

## பஸ் கட்டணங்கள்...

வழங்கியுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ மேற்படி தகவலை வெளியிட்டுள்ளார்.

குறைந்தபட்ச பஸ் கட்டணம் ரூ. 27 இலிருந்து ரூ. 30 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழலால் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையிலேயே பஸ் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (அ)

## ஈரான் மீதான தாக்குதல்...

இதையடுத்து, ஈரானும் பதில் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

மேலும், ஹார்முஸ் நீரிணையை ஈரான் முடக்கியுள்ளதால், அந்த பாதையில் கப்பல் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் உள்ளிட்ட எரிபொருள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் அவற்றின் விலை உயர்ந்து வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக ஊடக பதிவில்,

"அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் நிலவும் விரோதப் போக்குகளுக்கு ஒரு முழுமையான மற்றும் நிரந்தரமான தீர்வு காண்பது குறித்து, கடந்த இரண்டு நாட்களாக மிகச் சிறந்த மற்றும் ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆழமான, விரிவான மற்றும் ஆக்கபூர்வமான இந்த பேச்சுகள் இந்த வாரம் முழுவதும் தொடர இருக்கிறது.

இந்த முயற்சி வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, ஈரானிய மின் நிலையங்கள் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது மேற்கொள்ள இருந்த அனைத்து ராணுவத் தாக்குதல்களையும் ஐந்து நாட்களுக்கு ஒத்திவைக்குமாறு போர் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப்பின் இந்த அறிவிப்பால் சர்வதேச சந்தையில் நேற்று (திங்கள்கிழமை) எண்ணெய் விலை 10 வீதத்துக்கு மேல் சரிந்துள்ளது. (அ)

## ஒட்டகப்புலத்தில் 2 ஏக்கர்...

கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் 2 ஏக்கர் தனியார் காணிகளை இராணுவத்தினர் விடுவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த காணிகளில் 234.8 ஏக்கர் காணி கடந்த 2024ஆம் ஆண்டு மே மாத காலப் பகுதியில் அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விடுவிக்கப்பட்டது.

ஏனைய காணிகளையும் விடுவிக்க விரைந்து நடவடிக்கை எடுப்போம் என அப்போது உறுதி அளிக்கப்பட்டிருந்த போதிலும், சுமார் 22 மாதங்களின் பின்னர் 2 ஏக்கர் காணி தற்போது விடுக்கப்பட்டுள்ளது.

இன்னமும் தேவாலயத்துக்கு அருகில் உள்ள காணிகள் சில இராணுவக் கட்டுப்பாட்டினுள் காணப்படுகின்றன. அவற்றினையும் விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## பால்மா, கோதுமைமா...

மற்றும் தடையற்ற விநியோகத்தைப் பேணுதல் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக, பால்மா இறக்குமதியாளர்கள் மற்றும் கோதுமை மா இறக்குமதி நிறுவனங்கள் (பிரீமா மற்றும் செரண்டிப்) நேற்று வர்த்தக அமைச்சிற்கு அழைக்கப்பட்டிருந்தபோதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டது.

எரிபொருள் விலை உயர்வு மற்றும் டொலரின் மதிப்பு அதிகரிப்பு என்பன தமது உற்பத்திச் செலவில் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும், இந்த இக்கட்டான சூழ்நிலையில் அரசாங்கத்துடன் இணைந்து மக்களுக்கு ஓரளவு நிவாரணத்தை வழங்குவதே தமது நோக்கம் என அந்நிறுவனங்கள் தெரிவித்தன.

இதன்படி, எதிர்வரும் மூன்று மாதங்களுக்குத் தேவையான பால்மா மற்றும் கோதுமை மா கையிருப்புகளை விநியோகிக்க முடியும் எனவும், எதிர்வரும் சித்திரை புத்தாண்டு பருவகாலம் முடியும் வரை எவ்வித விலை அதிகரிப்பையும் மேற்கொள்ளப்போவதில்லை எனவும் அந்நிறுவனங்கள் அமைச்சரிடம் உறுதிப்படுத்தின.

இதேவேளை, எரிபொருள் ஒதுக்கீடு காரணமாக விநியோக நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை நிறுவனங்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்தன. இதற்குப் பதிலளித்த அமைச்சர், உணவு விநியோகத் துறையில் ஈடுபட்டுள்ள போக்குவரத்து சேவையாளர்களின் எரிபொருள் தேவைகளை அடையாளம் காணவும், திட்டமிடலை முறைப்படுத்தவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசேட தரவு சேகரிப்பு திட்டத்தில் பதிவு செய்யுமாறு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மத்திய கிழக்கு போர்ச் சூழலை எதிர்கொள்ள அரசாங்கம் தயார்!

**அமைச்சர் உபாலி பன்னில கூறுகிறார்**

கொழும்பு, மார்ச் 24

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் நீண்டகாலம் தொடருமானால், அதன் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள் நமது நாட்டின் பொருளாதாரம் மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கையை பாதிக்க வாய்ப்புள்ளது. எனினும், இச்சூழ் நிலையைக் கையாள்வதற்கு அரசாங்கம் முறையான திட்டங்களுடன் அவதானமாகச் செயல்பட்டு வருகின்றது என கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னில தெரிவித்துள்ளார்.

களனி தொகுதியில் பல அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த நிலைமையைப் புரிந்து கொண்டு அனைவரும் பொறுமையுடன் செயற்படவேண்டும். எவ்விதத்திலும் பொதுமக்கள் தேவையற்ற அச்சமோ அல்லது கவலையோ அடையத் தேவையில்லை எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

## ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி வரை விமான எரிபொருள் கையிருப்பில்

கொழும்பு, மார்ச் 24

இலங்கையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி வரை சர்வதேச விமான சேவைகளைத் தடையின்றி முன்னெடுப்பதற்குத் தேவையான எரிபொருள் கையிருப்பு உள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை அறிவித்துள்ளது.

இது குறித்து சிவில் விமான போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் தம்மிக ரம்புக்வெல்ல கருத்துத் தெரிவிக்கையில்-

சர்வதேச வானூர்திகளுக்கான ஜெற் ஏ-1 ரக எரிபொருள் எதிர்வரும் ஏப்ரல் 16 வரை போதுமான அளவு கையிருப்பில் உள்ளது.

உள்நாட்டு வானூர்தி போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் சிறிய ரக வானூர்திகளுக்குத் தேவையான அவ்காஸ் ரக எரிபொருள், அடுத்த மூன்று மாதங்களுக்குப் போதுமான அளவு சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத் தேவைகளைக் கருத்திற் கொண்டு, மேலதிக ஜெற் ஏ-1 மற்றும் அவ்காஸ் எரிபொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான புதிய கொள்வனவு கட்டளைகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் வானூர்தி சேவைகளில் எவ்விதத் தடங்கல்களும் ஏற்படாது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வானூர்தி எரிபொருள் கையிருப்பு மற்றும் தரவுகளைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதற்காக "தேசிய வானூர்தி எரிபொருள் ஒருங்கிணைப்புப் பிரிவு" எனும் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (அ)

## சுற்றுலாத்துறை சேவை வழங்குவோருக்கு எரிபொருள் வழங்குவதற்கு விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாண மாவட்டத்தில், இலங்கை சுற்றுலாத் துறை அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்து இயங்கிவரும் சுற்றுலாத்துறை சேவை வழங்கும் பங்குதாரர்களின் போக்குவரத்துத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு விசேட எரிபொருள் வழங்குவதற்கான பிரத்தியேக ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் ஜே.விவேகானந்தன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடியான சூழலிலும் சுற்றுலாத் துறையைத் தடையின்றித் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே இந்த விசேட விநியோக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்த விசேட எரிபொருள் விநியோகத் திட்டம் தொடர்பான மேலதிக விவரங்களை அறிந்துகொள்வதற்கும், தமக்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் வடக்கு மாகாண சுற்றுலாத்துறைப் பணியகத்தின் தலைவரைத் தொடர்புகொள்ளுமாறு துறைசார்ந்த சேவை வழங்குநர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டிய இலக்கம்:

தொலைபேசி: 077 730 7892 (தலைவர், வடக்கு மாகாண சுற்றுலாத்துறைப் பணியகம்). (அ)

## வடக்கில் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் கியூ.ஆர். ஊடாக எங்கும் பெறுவதற்கு வசதி!

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடக்கு மாகாணத்தில் சேவையிலீடுபடும் தனியார் பஸ்களுக்குத் தேவையான டீசலை, எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் "கியூ.ஆர்" முறைமை ஊடாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர், பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய நெருக்கடியான சூழலைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்தால் எரிபொருள் விநியோகத்தில் சில மட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், பொதுப்போக்குவரத்துச் சேவைகள் எவ்விதத் தடையுமின்றித் தொடர வேண்டும் என்பதற்காக, ஆரம்பத்தில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக மாத்திரம் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எனினும், நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து தனியார் பஸ் உரிமையாளர்களின் வசதி கருதி, தற்போது வடக்கு மாகாணத்திலுள்ள எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் அவர்கள் தமக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான புதிய ஏற்பாடுகளை வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைவாக, ஒவ்வொரு தனியார் பஸ்ஸினதும் வழித்தட அனுமதியை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் இருவழிப் பயணத்துக்குத் தேவையான எரிபொருளின் அளவு துல்லியமாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கணிப்பீட்டுக்கு அமைய ஒவ்வொரு பஸ்ஸுக்குமான உரிய எரிபொருள் ஒதுக்கீடு தீர்மானிக்கப்பட்டு, தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு அதற்கான விசேட "கியூ.ஆர்" வழங்கப்படும்.

அந்த "கியூ.ஆர்" குறியீட்டைப் பயன்படுத்தி, அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட டீசலை எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் இனிவரும் காலங்களில் தடையின்றிப் பெற்றுக்கொள்ள முடியும்-என்றார். (அ)

## உணவுப் பொருள்களை பதுக்கி வைக்காதீர்கள்!

**மக்களிடம் அரசு கோரிக்கை**



கொழும்பு, மார்ச் 24

நாட்டில் போதுமான உணவுப்பொருள்கள் கையிருப்பில் உள்ளதால், தேவையற்ற முறையில் உணவுப் பொருள்களை பதுக்கி வைப்பதை தவிர்க்குமாறு அமைச்சர் வசந்த சமரசிங்க பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த அவர்,பண்டிகை காலத்துக்கு முன்பாக, மேலும் பல அத்தியாவசியப் பொருள்களை நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்காக பல்வேறு நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

பண்டிகைக் காலத்தில் உணவு பற்றாக்குறையின்றி வழங்கப்படுவதை உறுதிசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்-என்றார். (அ)

## இலங்கையின் ஆழ்கடல் பகுதிகளில் இயற்கை எரிவாயு, மசகு எண்ணெய்!

கொழும்பு, மார்ச் 24

இலங்கையின் ஆழ்கடல் பகுதிகளில் சுமார் மூன்று டிரில்லியன் கன அடி இயற்கை எரிவாயு மற்றும் பல பில்லியன் பெரல் கச்சா எண்ணெய் இருப்புக்கள் காணப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சாலிய விக்ரமசூரிய, அண்மைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நில அதிர்வு தரவு ஆய்வுகளின் அடிப்படையில் இந்தத் தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நாட்டின் ஆட்புல எல்லைக்குள் மற்றும் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குட்பட்ட கடற்பரப்பிலேயே இந்த பாரிய எரிசக்தி வளங்கள் பொதிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இந்த வளங்களை வணிக ரீதியாக அகழ்ந்தெடுக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வாய்ப்பில்லை எனவும், அதற்கான முதலீட்டாளர்களை ஈர்க்கும் ஆரம்பகட்ட நடவடிக்கைகளே தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## எரிபொருள் விலை உயர்வால் விவசாயத்துறை நெருக்கடியில்!

கொழும்பு, மார்ச் 24

எரிபொருள் விலையதிகரிப்பு காரணமாக நாட்டின் விவசாயத் துறை பாரிய வீழ்ச்சியைச் சந்திக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தேசிய விவசாய சங்கத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டீசல் மற்றும் பெற்றோல் விலைகள் 80 முதல் 90 ரூபாவால் அதிகரித்துள்ள நிலையில், தற்போதைய அறுவடை காலத்தில் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர்.

நெல் அறுவடை இயந்திரங்கள் மற்றும் ஏனைய விவசாய உபகரணங்களுக்கான சேவைக்கட்டணம் ஒரு [illegible] 2000 முதல் 3,000 ரூபா வரை அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒரு ஏக்கர் நெல் அறுவடைக்கான செலவு 25,000 ரூபா வரையிலும், வயல் உழுவதற்கான செலவு 20,000 ரூபாவிலிருந்து 25,000 ரூபா வரையிலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலை இருந்தபோதிலும், போக்குவரத்துச் செலவு அதிகரிப்பைக் காரணம் காட்டி, கொள்வனவாளர்கள் ஒரு கிலோகிராம் நெல்லை 110 ரூபாவுக்கும் குறைவான விலையிலேயே கொள்வனவு செய்வதாக அனுராத தென்னக்கோன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதனால் ஏக்கர் ஒன்றுக்கு 120 [illegible] கிடைக்கவேண்டிய இடத்தில் விவசாயிகள் நட்டத்தையே எதிர்நோக்குகின்றனர்.

எரிபொருள் விலை உயர்வு மற்றும் விவசாய உற்பத்திச் செலவு அதிகரிப்பு காரணமாக வரும் மாதங்களில் அரிசி, மரக்கறிகள் மற்றும் பழங்களின் விலைகள் மேலும் அதிகரிக்கக்கூடும். குறிப்பாக, எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மலையக மரக்கறிகளின் விலைகள் கணிசமான அளவு உயரும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் இந்தப் பிரச்னைகள் குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி, மானியங்கள் அல்லது நிவாரணங்களை வழங்கவேண்டுமென விவசாய சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.